பக்கங்கள்: 10 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 21 சனிக்கிழமை 04.04.2020 | கதிர் 18

# முழுக் கொழும்பு மாநகரும் முற்றுகை முடக்கத்துக்குள்?

## அரசு உயர்மட்டம் தீவிர ஆலோசனை

கொழும்பு, ஏப்ரல் 04

கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் பலர் அடுக்கடுக்காகக் கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து, கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களைத் தேடிப் பிடிப்பதற்காகவும், அது பரவுவதைத் தடுப்பதற்காகவும் கொழும்பு நகரைச் சில நாள்களுக்கு அசைய விடாது முற்றாக முடக்குவது குறித்து அரச உயர்மட்டத் தில் ஆலோசனைகள் நடந்து வருகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2

## இதுவரை 159 பேர் பாதிப்பு

இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 159 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பில் 5 பேரும், யாழ்ப்பாணத்தில் 3 பேருமாக நேற்றுப் புதிதாக 8 பேர் அடையாளம் காணப்பட்ட நிலையில்இந்தஎண்ணிக்கை உயர்ந்துள்ளது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

2

## வெளி மாவட்டங்களில் அகப்பட்டோர் சொந்த இடம் திரும்புவதற்கு ஒழுங்கு!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்கிறார்



வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள ஏனைய மாவட்டங்களுக்குள்ளும் இலங்கையின் ஏனைய மாவட்டங்களுக்கும் தமது வாழ்வாதார தேவைகள் மற்றும் பிற தேவைகளுக்காக சென்று மீளவும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாதுள்ள மக்கள் தமது விவரங்களைத் தெரியப்படுத்துமிடத்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

2

## கொழும்பு முதலிடம்

கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் கொரோனா வைரஸ் தொற்றும் அபாயம் அதிகமுள்ள மாவட்டங்களாகத் தொடர்ந்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமான கொரோனா நோயாளர்கள் அடை

2

## வலிகாமம் தென்மேற்கில் கொரோனா பரிசோதனை



யாழ்ப்பாணம், ஏப். 04

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் 8 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின்

2

## கொரோனா உச்சத்தில் ஐந்தாவது நபரும் சாவு!

### இலங்கையில் தொடரும் சோகம்

கொழும்பு, ஏப். 04

இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மற்றுமொருவர் இன்று காலை உயிரிழந்துள்ளார். இதன்படி நாட்டில் கொரோனாவால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது.

ஹோமாகமவைச் சேர்ந்த 44 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

2

## வெலிகந்தைக்கு இன்று மூவர் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.05

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் என நேற்று அடையாளம் காணப்பட்ட மூவரும் வெலிகந்தை விசேட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி இத்தகவலைத் தெரிவித்தார்.

2

## குமுழமுனை இளைஞன் தாக்கப்பட்டு உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஏப். 04

முல்லைத்தீவு குமுழமுனைப் பகுதியில் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த இளைஞர் ஒருவர், சிகிச்சை பயனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கைகலப்புச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிலையில் இளைஞன் நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

குமுழமுனையைச் சேர்ந்த இராசலிங்கம் ரமேஷ் (வயது - 26)

2

## 35 பேரின் முடிவு இன்று மாலையில்

யாழ்ப்பாணம், ஏப். 04

கொரோனா தொற்றுப் பரிசோதனைக்காக இரத்தமாதிரிகள் எடுக்கப்பட்ட 35 பேரின் முடிவு இன்று மாலை வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தாவடியில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில்

2

## 12,223 பேர் கைது

கொழும்பு, ஏப். 04

பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 12 ஆயிரத்து 223 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டிலேயே 12 ஆயிரத்து 223 பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு 3,017 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் கடந்த 20ஆம் திகதி முதல் நாட்டில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு வருகின்றது.

2

## முழுக் கொழும்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து அரச உயர் மட்டத்தில் விவாதிக்கப்பட்டு வருவதாகவும், இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட முடிவு எட்டப்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

கொழும்புமாவட்டத்திலேயே அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாவட்டத்தில்40நோயாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர். இதனை அடுத்தே அரசஉயர்மட்டம்இது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பை முழுமையான முடக்கும் நடவடிக்கையை செயற்படுத்துவதற்கு பொலிஸ் நிலையங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் மேலதிக வழிமுறை களுக்காக காத்திருக்கின்றனஎன்றும்கூறப்படுகிறது.

கொரோனா வைரஸ் காரணமாக மருதானையைச் சேர்ந்த ஒரு நோயாளி இறந்ததை அடுத்து, அங்கு சுமார் 2,000 பேர் சுய தனிமைப் படுத்தலுக்கு அனுப்பப்பட்டு வீடுகளை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், கொழும்பு நகர எல்லைக்குள் அடையாளம் காணப்பட்ட நோயாளிகளுடன் தொடர்பு வைத்திருந்த 308 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் தொற்றுக்குள்ளான அதிகமானவர்கள் இருக்கக் கூடும் என்று பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகள் அஞ்சுகின்றனர். இதனாலேயே இந்த முடிவு எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## கொழும்பு முதலிடம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளம்காணப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 40 நோயாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்தபடியாக புத்தளம் மாவட் டத்தில் 25 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 24 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 11 பேரும் அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

அதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 பேரும், கண்டி மாவட்டத்தில் 4 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 3 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 2 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

காலி, கேகாலை, மட்டக்களப்பு மற்றும் பதுளை மாவட்டங்களில் தலா ஒருவர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களைத் தனிமைப்படுத்தும் நிலையங்களில் 34 பேரும், இலங்கை வந்திருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் 5 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

## வெலிகந்தைக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரியாலை முள்ளி வீதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மகள் ஆகியோர் கொரோனா தொற்றிற்கு உள்ளாகியிருந்தமை இனங்காணப்பட்டமையைத் அடுத்து அவர்கள் இன்று வெலிகந்தை விசேட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

## வெளி மாவட்டங்களில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகை இன்று அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா தொற்று இலங்கையிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதால் அத்தொற்றிலிருந்து நாட்டு மக்களை பாதுகாப்பதற்காக அரசு பல பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதுடன் ஊரடங்குச் சட்ட நடைமுறையையும் மேற்கொண்டுள்ளது. இதனால் பலர் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என எமக்குத் தொலைபேசி ஊடாக தகவல்கள் கிடைத்தவண்ணம் உள்ளன.

ஆனாலும் இந்த ஊரடங்குச் சட்ட நடைமுறை ஒட்டுமொத்த இலங்கை வாழ் மக்களதும் பாதுகாப்பு கருதிய ஒன்றாக அமைவதால் அந்த நடைமுறையை எமது மக்கள் மதித்து பின்பற்ற வேண்டியதும் அவசியமானது.

அந்தவகையில் ஊரடங்குச் சட்ட நடைமுறை நாட்டில் அமுலாக்கப்படுவதற்கு முன்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களின் மாவட்டங்களுக்குள்ளேயும் இலங்கையின் ஏனைய பிற மாவட்டங்களுக்கும் தொழில் ரீதியாகவோ அன்றி வேறுபல தேவைகள் கருதியோ சென்று மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது இருப்பவர்கள் தமது முழுப் பெயர், அடையாள அட்டை இலக்கம், திரும்ப வேண்டிய சொந்த முகவரி, சொந்த பிரதேச செயலக பிரிவு, தொலைபேசி இலக்கம், தற்போது தங்கியுள்ள முகவரி உள்ளிட்ட விவரங்களை திரட்டி கீழக்காணும் 0777 781891 WhatsApp இலக்கத்திற்கு அனுப்பும் பட்சத்தில் அதற்காதன தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். -என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குமுழமுனை இளைஞன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

முல்லைத்தீவு குமுழமுனை பகுதியில் இரு தரப்பினருக்கு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கைகலப்பு இடம்பெற்றது.

தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான இளைஞன், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் அவர் சிகிச்சை பயனின்றி நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னேடுத்துள்ளனர்.

## இதுவரை 159 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை 24 பேர் பூரண குணமடைந்துள்ளமையுடன் ஐவர் உயிரிழந்துள்ளனர். ஏனைய 130 பேரும் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன், 30 வைத்தியசாலைகளில் 250 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## வலிகாமம் தென்மேற் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் இன்று காலை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பரிசோதனைச் செயற்பாடுகள் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இ.சோதீஸ் ஒழுங்குபடுத்தலில் வலிகாமம் தென்மேற்கு சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை தாதி உத்தியோகத்தராலும் அப்பகுதிக்கான பொது சுகாதார பரிசோதகர் எஸ்.கஜேந்திரனாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளை யாழ். போதனா வைத்தியசலைப் பணிப்பாளர் டாக்டர்.த.சத்தியமூர்த்தி நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்தார்.

அதுமட்டுமன்றி இப் பகுதியில் கொரோன தொற்றுக்கு உள்ளானவரது வீடும் அவர்கள் நடமாடியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அதனைச் சூழவுள்ள பல வீடுகளும் முற்றுமுழுதான தொற்று நீக்கும் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்தச்செயற்பாடுகளை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இ.சோதீஸ் தலைமையில் இயங்கிவரும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார பிரிவு உத்தியோகத்தர்கள் பொலிஸார் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழு தொடர்ந்தும் சிறந்தமுறையில் முன்னெடுத்துச் செயற்படுத்தும் என்று வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்தார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட 08 குடும்பங்களினதும் இக்கட்டான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு வழங்குவதற்கென மருதடிதிண்ணை அறவளி நிலையத்தினரால் உலர் உணவுப் பொருள்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த உலர் உணவுப்பொருள்கள் சுகாதாரப் பரிசோதகர்களின் பரிசீலனையின் பின்னர் பொதியிடப்பட்டு இன்று மாலை தனிமைப்படுத்தப்பட்டவர்களின் வீடுகளுக்கு கையளிக்கப்பட்டது என வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மேலும் கூறினார்.

## கொரோனா உச்சத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில் -

இத்தாலியில் இருந்து நாடு திரும்பிய அந்த நபர், கடந்த 23ஆம் திகதி கந்தக்காடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் அவர் கொரோனா தொற்றாளராக இனங்காணப்பட்டு 26ஆம் திகதி வெலிக்கந்த ஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதே அவரது உடலுக்குள் கொரோனா வைரஸ் தீவிரமாக நுழைந்திருந்தது. அதனால்தான் அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு வேறு எவ்விதமான நோய்களும் இருக்கவில்லை. இந்தநிலையில், அவர் இன்று காலை உயிரிழந்துள்ளார். இவ்வாறான உயிரிழப்பு மிகவும் வருத்தமளிக்கின்றது - என்றார்.

# சுவிஸ் போதகரின் ஆராதனையில் பங்கேற்றவர்கள் வெளிவாருங்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 04

அரியாலைப் பகுதியில் உள்ள தேவாலயத்துக்குச் சென்று இதுவரை தனிமைப்படுத்தலுக்குச் செல்லாது மறைந்திருப்பவர்கள் தங்களை உடனடியாக அடையாளப்படுத்துமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் சுவிஸ் போதகர் ஒருவரால் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் தற்போது ஒவ்வொருவராக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் நெருங்கிப் பழகிய 325 பேர் வரையிலானவர்கள் இதுவரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் தற்போது குறித்த தேவாலயத்திற்குச் சென்று இன்றுவரை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் சிலர் இருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறு, இருப்பவர்கள் பற்றிய தகவல்களை எமக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதோடு அவர்கள் தாமாக முன்வந்து தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுமாறு இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கொரோனா தொற்று அறிகுறிகள் இல்லாதவர்களுக்கும் நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே தனிமைப்படுத்தப்பட்டுள்ள அனைவருக்கும் கொரோனா பரிசோதனை செய்வதற்கு முயற்சிகளை எடுத்துள்ளோம்.

அந்த அடிப்படையில் தாவடியில் உள்ள ஒரு பகுதியினருக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளனர். மேலும் அரியாலைப் பகுதியில் உள்ளவர்களுக்கும் மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்படவுள்ளன - என்றார்.

# பொலிஸார் எச்சரிக்கை!

இலங்கையில் இதுவரை இனங்காணப்பட்ட கொரோனா நோயாளர்கள் இனங்கணப் பட்ட பிரதேசங்களில் வசிப் பவர்கள் மிக அவதானத்தோடு செயற்படுமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் மேலும் பரவும் அச்சம் காணப்படும் நிலையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்த எச்சரிக்கையை வழங்கியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் கொரோனா முதல் நோயாளி ஜனவரி மாதம் 27 ஆம் திகதி இனங்காணப்பட்டார். அவர் சீனா நாட்டைச் சேர்ந்தவர். அதேவேளை முதலாவது கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உள்ளான இலங்கைப் பிரஜை கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டார்.

இதனை தொடர்ந்து கண்டுப்பிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் நோயாளிகளிடம் இருந்து அவர்கள் நேரடி தொடர்பு வைத்திருந்தவர்களுக்கு தொற்று ஏற்பட்டமை கண்டறியப்பட்டது.

கொரோனா தொற்று கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் அனைவரும் யாழ்பாணம், பேருவளை, கொழும்பு உட்பட நாட்டின் 19 பகுதிகளில் கண்டறியப்பட்ட தொற்றாளிகளுடன் நேரடியாக தொடர்புபட்டவர்கள். ஆகவே, இப்பிரதேச மக்கள் கொரோனா அறிகுறிகள் தென்பட்டால் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களை நாடவும்.

இதுவரை கொரோனா வைரஸ் தொற்று சமூகத்துக்குள் பரவவில்லை என்பதை சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். கொரோனாவை தடுப்பதில் தேசிய புலனாய்வு பிரிவு முக்கியபங்கு வகிக்கின்றது.

நோய் தொற்றாளிகள் காணப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் உதவிகள் தேவைப்படும் போது பாதுகாப்பு படைகள், சுகாதார அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவேண்டும் - என்றார்.

## 12,223 பேர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் கடந்த 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் இதுவரையான காலப் பகுதியினுள்ளே இந்த கைது நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய நேற்று காலை 6.00 மணி முதல் இன்று காலை 6.00 மணி வரையான 24 மணித்தியால காலப்பகுதியினுள் 1,493 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, 360 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## 35 பேரின் முடிவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து நேற்று 18 பேரின் இரத்தமாதிரிகள் எடுக்கப்பட்டு அவை அனுராதபுரத்துக்குப் பரிசோதனைகாக அனுப்பி வைக்கப்பட்டன. அத்துடன் மானிப்பாய், அரியாலைப் பகுதிகளில் இன்று காலை 17 பேரின் இரத்தமாதிரிகள் பெறப்பட்டு அவை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. இந்த 35 பேரின் முடிவுகளும் இன்று மாலையில் கிடைக்கும் எனக் கூறப்பட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## பேரிடரில் பெருங்கொள்ளை

'தவிச்ச முயல் அடிப்பது' என்பார்கள்.

அந்த மந்திரம் – தந்திரம் – நன்கு புரிந்தவர்கள் நமது வர்த்தகர்கள்.

அதுவும் யுத்த காலத்தில் அது தொடர்பில் அதீத அறிவும் அனுபவமும் பெற்றவர்கள் அவர்கள்.

இந்தப் பேரிடர் சமயத்திலும் அந்தக் கைவரிசையை அவர்கள் காட்டுகின்றனர் என்ற குற்றச்சாட்டுப் பலமாக எழுந்துள்ளது.

இரண்டு விதமான தவறுகள் குறித்து இப்போது அதிகம் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

ஒன்று – அதீத விலையேற்றம்.

அடுத்தது – பதுக்கல்.

மரக்கறி மற்றும் விளை பொருள்கள் இப்போது பெரும்பாலும் நேரடியாக உற்பத்தியாளர்களினாலேயே சந்தைப் படுத்தப்படுகின்றன. இடைத் தரகர்கள், 'கமின்கள்', சந்தைக் கட்டணம் என்பவை இல்லாமலேயே விற்பனையாகின்றன.

ஆனாலும், வழமையை விட அதிக விலையில்தான் அவை கிடைக்கின்றன.

எந்தப் பொருளுக்கும் இப்போது கட்டுப்பாட்டு விலை, கட்டுப்பாட்டை பரிசோதிக்கும் நடைமுறை என்று எதுவும் இல்லை.

ஊரடங்கு மத்தியில் விற்பனை என்பதே சட்ட முறையற்றதுதானே...! அதற்குள் எப்படி சட்டம் புகுந்து கட்டுப்படுத்த முடியும் என்ற மிதப்புப் போலும் விற்பவர்களுக்கு.

ஊரடங்கு நெருக்கடியில் எப்படியாயினும் கிடைத்ததை, கிடைத்த விலைக்கு வாங்கினால்தான் வீட்டில் உலை எரியும் என்ற இக்கட்டு நிலை வாங்குபவனுக்கு.

பிறகென்ன...?

இந்தப் பேரிடரின் ஆரம்ப நிலை இது. இந்த ஊரடங்கு வாழ்வும், தனிமைப்படுத்தல்களும், முடங்கும் நிலையும் இன்னும் எத்தனை வாரங்கள், எத்தனை மாதங்கள் தொடர் போகின்றனவோ யாருமறியார்.

ஆரம்ப நிலையிலேயே இப்படி இக்கட்டில் கோடி புரட்டும் தந்திரத்தை நமது வர்த்தகர்கள் முன்னெடுத்தால், காலம் செல்லச் செல்ல நிலைமை என்னவாகும், எப்படியிருக்கும் என்பது கற்பனை பார்க்க முடியாத மலைக்க வைக்கும் விடயமாக இருக்கின்றது.

பல இடங்களில் கடைகள், வர்த்தக நிலையங்கள் பூட்டு.

மக்கள் அசைவியக்கத்தைக் கட்டுப்படுத்தவதற்காக மக்களை வெளியே வராதீர்கள், அத்தியாவசியப் பொருள்களை வீடு தேடி வந்து தருகிறோம் என்கின்றார்கள்.

ஆனால், அந்த விநியோகத்துக்கான கட்டணம் வேறு.

அதுபோல வாகனங்களில் பொருள்களை எடுத்து வந்து விநியோகிப்பவர்களிலும் பலர் 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மித்த கதை மாதிரி' ஊரடங்கால் வீடுகளுக்குள் முடங்கி வருமானமின்றித் தவிக்கும் அன்றாடங் காய்ச்சிகளின் வயிற்றில் அடிப்பவர்களாகவே இருக்கின்றனர்.

உண்மையில், இப்படிக் கஷ்டமுறும் மக்களுக்கு கட்டாயம் உதவ வேண்டும் என்ற மன உந்துதலில் பல நல்லுள்ளங்கள் சுயமாக முன்வந்து பெருமளவில் உதவிபுரிகின்றன.

அரசின் அறிவிக்கப்பட்ட நிவாரணத் திட்டங்கள் ஏதும் மக்களை இன்னும் வந்து எட்டாத நிலையில் இந்தப் பரோபகாரிகளின் தயாள சிந்தனைதான் பல வீடுகளில் உலைகளை எரிய வைத்திருக்கின்றது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

இப்படி சமூகத்தில் ஒரு தரப்பு தன்னை ஒறுத்து கஷ்டப்படும் மக்களுக்கு உதவ, மற்றொரு தரப்பு 'எரிந்த வீட்டில் பிடுங்கியது லாபம்' என்ற மாதிரி கொள்ளை லாபம் அடித்துத் தட்டிச் சுத்தும் அவலம் நம் மத்தியில் தொடர்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதன், தமிழ்த் தேசியக் கட்சியின் என்.ஸ்ரீகாந்தா போன்றோர் இப்படிக் கொள்ளை லாபமடிக்கும் 'கோடரிக் காம்புகள்' குறித்தும் அவர்கள் மீதான அவசர அவசிய நடவடிக்கை குறித்தும் குரல் எழுப்பியிருக்கின்றனர்.

விலைக் கட்டப்பாட்டு அதிகாரிகள் மூலம் விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி யாழ் மாவட்ட அரச அதிபரைக் கோரியிருக்கின்றார் அங்கஜன் இராமநாதன்.

ஊரடங்கு வேளையில் வீதியில் போக்குவரத்துக் குற்றங்களை இழைத்த வாகனம் மீது நடவடிக்கை எடுப்பது போன்றதுதான், ஊரடங்கு சமயத்தில் வர்த்தகர்கள் மீது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் பாய்ச்சல் நடத்துவதும் கூட.

சமூகத்தை சீர்செய்ய அதுதான் வழி என்றால் அதை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை.

# இலங்கையின் பொதுத்தேர்தல் ஆப்பிழுத்த குரங்கின் நிலை!

### மட்டு. முன்னாள் எம்.பி.அரியநேத்திரன் கருத்து

அவசரப்பட்டு நாடாளுமன்றம் ஆயுள்காலம் முடிவதற்கு முன் ஜனாதிபதி கோட்டாபய நாடாளுமன்றத்தைக் கலைத்தமையால் இன்று பொதுத்தேர்தல் என்பது ஆப்பிழுத்த குரங்கின் நிலையாக மாறிவிட்டது எனக் கூறினார் மட்டககளப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பட்டிருப்பு தொகுதி இலங்கைத் தமிழரசு கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன். பொதுத்தேர்தல் தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில் அவர் கூறியவை வருமாறு:-

உலகளாவிய ரீதியில் தற்போது ஆக்கிர



மித்துள்ள கொரோனா வைரஸ் தாக்கம் எமது நாட்டையும் விட்டுவைக்கவில்லை. ஏற்கனவே சீனாவில் முதன் முதலாக இந்த நோய் அதிகரித்த போது அது இலங்கையையும் பாதிக்கும் என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த விடயமாகும்.

ஆனால் இலங்கை ஜனாதிபதி அதனை உடனடியாக கவனத்தில் எடுக்காமல் எப்போது மார்ச் 2 ஆம் திகதி வரும் என்பதை பார்த்துக்கொண்டு நாடாளுமன்றம் நாலரை வருடம் முடிந்த அன்றே - அதாவது மார்ச் 2 ஆம் திகதி - அவசரப்பட்டு நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.

அதனால் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் தமது கடமையை சரிவர செய்யும் நோக்கில் ஜனாதிபதி குறிப்பிட்ட ஏப்ரல் 25 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தும் பொருட்டு கடந்த மார்ச் 19க்கு முன்னதாக வேட்பு மனுக்கள் கோரப்பட்டன. அதன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டன.

வேட்பு மனுக்கள் கோரப்பட்டு மறுதினமான மார்ச் 20 ஆம் திகதி தொடக்கம் நாட்டில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து மக்களை காப்பாற்றவேண்டிய நிலையில் தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த விடயங்கள் பாராட்டப்பட வேண்டியவை. மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால் வேட்பு மனு இறுதிநாளான மார்ச் 19 க்கு முன்னமே இலங்கையில் இந்த நோய் பாதிப்பால் முதன் முதலாக சீன நாட்டு பெண் அங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். அதனால் அந்த நோய் மேலும் பரவும் வாய்புள்ளது என்பதை இலங்கை மருத்துவர் சங்கம் சுட்டிக்காட்டி இருந்தது.

அவ்வாறான வேளையில் வேட்புமனுவைத் தாமதிக்ககூடிய விதமாக சட்ட ஆலோசனைகளை பெற்று வேட்புமனு கோராமல் கூட கால நீடிப்பு செய்வது தொடர்பாக உச்ச நீதிமன்ற ஆலோசனையை பெற்றிருக்கலாம்.

அல்லது சீனாநாட்டில் இந்த நோய் ஆரம்பித்த சில மாதங்களால் நாடாளுமன்றத்தை கலைக்காமல் கொஞ்சம் விட்டு பார்த்திருக்கலாம்.

இரண்டுமே செய்யவில்லை.

தேர்தல் சட்டத்தின் படி ஜனாதிபதியால் தமது நிறைவேற்று அதிகாரத்தால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் அது கலைத்த திகதியில் இருந்து சரியாக 90 நாள்கள் முடிவதற்கு முன் அடுத்த புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். இதன் நிமித்தமே எதிர்வரும் ஏப்ரல் 25 பொதுத்தேர்தலும் மே இரண்டாம் வாரம் நாடாளுமன்றம் கூட்டப்படலும் என வர்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.

இப்போது இரண்டும் கெட்டான் நிலையாக - ஆப்பிழுத்த குரங்கின் கதையாக - தேர்தல் கதை மாறிவிட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி கையாளும் செயல்பாடு ஏப்ரல் மாதம் வரையுமே உண்டு என ஒருசாராரும் காபந்து அரசின் ஆயுள் ஜூன் 2 வரை என்பதே சட்டம் என இன்னோர் சாராரும் தெரிவித்தும் வருகின்றனர். உடனடியாக மீளவும் நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும் என எமது தமிழ்தேசிய கூட்டமைப்பு சார்பில் ஆதாரத்துடனும் சட்டரீதியான வியாக்கியனாங்களைச் சுட்டிக்காட்டியும் கடந்த இரண்டு முறை பிரதமர் மஹிந்த தலைமையில் இடம்பெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வலியுறுத்தியிருந்தார்.

இதனைக் கணக்கெடுக்காத அரசு எப்படியும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தலாம் என மனப்பால் குடிப்பதை காணமுடிகிறது. இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையை தேர்தல் தொடர்பாக பெறுமாறு எழுத்துமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது ஜனாதிபதியோ, தேர்தல் ஆணைக்குழுத் தலைவரோ தேர்தல் தொடர்பாக முடிவெடுக்கமுடியாத நிலை உருவாகிவிட்டது. நீதித்துறையே இதற்கான பதில் வழங்கவேண்டும்.

யார் பதில் வழங்கினாலும் இறைவனின் பதில்தான் இப்போது கொரோனா வைரஸ் நோயில் உள்ளது. அது எப்போது குணமாகும், எப்போது நாட்டைவிட்டு விலகும், எப்போது ஊரடங்கு சட்டம் முழுமையாக நீக்கப்படும், எப்போது தனிமைப்படுத்தல் முகாம்கள் மூடப்படும் என்பது எவருக்குமே தெரியாது.

எத்தனை மாதங்கள் இவ்வாறான நிலை, ஒரு நல்ல சுதந்திரமான நிலை மீண்டும் எப்போது வரும் என்பதெல்லாம் எவருக்கும் தெரியாது. அதற்கு இடையில் நாட்டில் பொருளாதாரம், சுயதொழில் பாதிக்கப்பட்டு பஞ்சம், பட்டினி, பயம் என்பன மக்கள் மத்தியில் தலைதூக்கும் நிலை ஏற்படும்.

தேர்தலை விட உயிர் முக்கியமாகும். என்ன நடக்கும் என்பதெல்லாம் நாம் பொறுத்திருந்து பார்ப்போம். நாட்டின் சட்டம் புதிதாக இயற்றப்படவேண்டிய நிலையை கொரோனா வைரஸ் படிப்பினையாகக் காட்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கை நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் ஆப்பிழுத்த குரங்கு நிலையாக மாறிவிட்டது. - என அவர் மேலும் கூறினார்.

# தேசிய சேமிப்பு வங்கியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஏப்.04

தேசிய சேமிப்பு வங்கியின் நடமாடும் சேவை (ATM Mobile Service) சங்கானை பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிகளில் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடரும் ஊரடங்கால் அவசர பணத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வங்கிகளுக்கு செல்லமுடியாது அவதியுறுகின்றவர்களின் (குறிப்பாக அரசாங்க பணியாளர்கள், சம்பளம் எடுக்க தவறியவர்கள் மற்றும் ஓய்வூதியம் எடுக்க தவறியவர்கள்) நிலையினைக் கருத்தில் கொண்டு 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேசிய சேமிப்பு வங்கியின் நடமாடும் சேவையை (ATM Mobile Service) சங்கானை பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(தேசிய சேமிப்பு வங்கி சங்கானை கிளை - 0212250003)

## டெல்லியில் தங்கியிருந்த

# 500 வெளி நாட்டவரும் கொரோனா தடுப்பில்!

டெல்லியில் 15க்கும் மேற்பட்ட மசூதிகளில் தங்கியிருந்த வெளிநாட்டைச் சேர்ந்த தப்லீக் ஜமாத்தைச் சேர்ந்த 500 மதப் பரப்புரையாளர்கள் பொலிஸாரால் கண்டறியப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

இந்த தப்லீக் ஜமாத் டெல்லியில் நடத்திய மாநாடு ஒன்றில் பங்கேற்ற பலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அந்த மாநாட்டுக்கு வந்திருந்தை வெளிநாட்டினரைப் பொலிஸார் இலக்கு வைத்துத் தேடினர்.

இந்தியா முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் இந்த வெளிநாட்டவர்களால் எங்கும் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டது. இதனால் இவர்கள் பல மசூதிகளிலேயே தங்கியிருந்தனர்.

அவர்களை அடையாளம் கண்டு மருத்துவர்கள் மூலம் அழைத்துச் சென்று கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டது.

டெல்லி நிஜாமுதீன் பகுதியில் உள்ள தப்லீக் ஜமாத் சர்வதேச அலுவலகத்தில் இந்த மாதம் தொடக்கத்தில் நடந்த மத வழிபாட்டு மாநாட்டில் வெளிநாட்டினர் உள்பட 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாகக் கூறப்பட்டது.

பல்வேறு மசூதிகளிலும் போலீஸார் நடத்திய சோதனையில் வெளிநாட்டினர் 500 பேரை அடையாளம் கண்டுபிடித்து மருத்துவமனைகளில் தனிமைப்படுத்தியுள்ளனர்.

தப்லீக் ஜமாத் விவகாரத்தில் கடந்த மாதத்தின் கடைசி நாட்களில் பல முக்கியத் தகவல்களை டெல்லி அரசுக்கு அனுப்பியுள்ளோம். வெளிநாட்டு மதப் பரப்புரையாளர்களைச் சந்தித்துச் சென்ற டெல்லி வாழ் மக்களையும் தேடி வருகிறோம். அவர்கள் டெல்லியை விட்டு எங்கும் செல்ல முடியாது" என்று டெல்லி ரோஹினி மாவட்டத்தின் கூடுதல் காவல் ஆணையர் சங்தார் மிஸ்ரா தெரிவித்தார்.



# இந்தியாவில் தொற்று 3 ஆயிரத்தை எட்டியது

இந்தியாவில் கொரோனா வைரஸின் பாதிப்பு நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. ஒரே நாளில் 300க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதால், எண்ணிக்கை 3 ஆயிரத்தை எட்டியுள்ளது. உயிரிழப்பு 86 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மருத்துவமனையில் கொரோனா நோயாளிகள் 2 ஆயிரத்து 650 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். 183 பேர் குணமடைந்தும் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோர் ஒரே நாளில் 6 பேர் அதிகரித்துள்ளனர். மகாராஷ்டிராவில் 3 பேர், டெல்லியில் இருவர், குஜாராத்தில் ஒருவர் இறந்துள்ளனர்.

இதில் அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் இதுவரை 19 பேர் உயிரிழந்துள்ளனர். அதைத் தொடர்ந்து குஜராத்தில் 9 பேரும், தெலங்கானாவில் 7 பேரும், மத்தியப் பிரதேசம், டெல்லியில் தலா 6 பேரும், பஞ்சாப்பில் 5 பேரும், கர்நாடகா, மேற்கு வங்கத்தில் தலா 3 பேரும், ஜம்மு காஷ்மீர், உத்தரப் பிரதேசம், கேரளாவில் தலா 2 பேரும் உயிரிழந்துள்ளனர்.

ஆந்திரா, தமிழகம், பிஹார், இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தலா ஒருவர் உயிரிழந்துள்ளனர்.


பாதிக்கப்பட்டவர்களில் 55 பேர் வெளிநாட்டினர்.

அதிகபட்சமாக மகாராஷ்டிர மாநிலத்தில் 423 பேரும், தமிழகத்தில் 411 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெல்லியில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 386 ஆக அதிகரித்துள்ளது. கேரளாவில் 295 பேரும், ராஜஸ்தான் மாநிலத்தில் 179 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆந்திர மாநிலத்தில் 161 பேரும், தெலங்கானாவில் 158 பேரும் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# கொரோனா பட்டினியால் எவருமே வாடக்கூடாது!

## இந்திய ஜனாதிபதி வலியுறுத்து



கொரோனா வைரஸ் பாதிப்பு மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள பொருளாதார முடக்கம் என்பவற்றால் யாரும் பட்டினி கிடந்து சாகக்கூடாது என்று தெரிவித்தார் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்.

இந்திய ஜனாதிபதி துணை ஜனாதிபதி வெங்கய்ய நாயுடுவுடன் இணைந்து மாநில ஆளுநர்கள் மற்றும் துணை நிலை ஆளுநர்களுடன் காணொலி மூலம் பேசினார்.

அப்போது ராம்நாத் கோவிந்த் தெரிவித்ததாவது:-

டெல்லி ஆனந்த்விஹார் பகுதியில் புலம்பெயர் தொழிலாளர்கள் திரளாக கூடியது, டெல்லி நிஜாமுதீன் பகுதியில் நடைபெற்ற தப்லிகி ஜமாத் மாநாடு ஆகிய இரண்டும் தலைநகரில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது

தேசிய அளவிலான ஊரடங்கினால் எவரும் பட்டினி கிடக்காமல் இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். ஊரடங்கு காலத்தில் வீடற்றோர், வேலை வாய்ப்பற்றோர் மற்றும் நலிந்த பிரிவினரின் தேவைகள் குறித்து நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

தேவைப்படுவோருக்கு உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை நாம் உறுதிப்படுத்தும் அதேவேளையில் சமூக விலகலிலும் நாம் கவனம் செலுத்தவேண்டும். இதில் எந்த சமரசத்துக்கும் இடமளிக்க கூடாது. நாட்டின் சில பகுதிகளில் மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் பொலிஸார் தாக்கப்பட்ட சம்பவங்கள் கவலை அளிக்கிறன - என்றார்.

## கேரளாவில் சிக்கியிருந்த

# 112 பிரான்ஸ் வாசிகள் இன்று நாடு திரும்பினர்

இந்தியாவில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு காரணமாக கேரளாவில் சிக்கியிருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 112 பேர் இன்று காலை கொச்சி விமான நிலையத்திலிருந்து சிறப்பு ஏர் இந்தியா விமானம் மூலம் பாரீஸ் புறப்பட்டுச் சென்றனர்.

கொரோனா வைரஸ் இந்தியாவுக்குள் வந்தபோது அது கேரளா வழியாக வந்தது. இந்தியாவின் முதல் கொரோனா நோயாளி கடந்த ஜனவரி 30ஆம் திகதி அன்று கேரள மாநிலத்தில் கண்டறியப்பட்டார். அவர் வெகுவிரைவிலேயே கொரோனாவிலிருந்து குணமானார்.

எர்ணாகுளத்தின் மட்டஞ்சேரியைச் சேர்ந்த 69 வயதான ஒருவர் உயிரிழந்ததுதான் கேரளாவின் முதல் கொரோனா உயிரிழப்பு. அவர் மத்தியக் கிழக்கு நாடுகளின் வழியே கேரளாவை வந்தடைந்ததால் அவருக்கு இந்த நோய் ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

இந்தியாவின் மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது கேரளாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை அதிகம். கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்ட பிறகு, கேரளாவுக்கு எவ்வளவு வெளிநாட்டுப் பயணிகள் வந்தாலும் முதல் வேலையாக அவர்கள் 28 நாட்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

மத்திய அரசு வழிகாட்டுதல்படி வெளிநாட்டவர்கள் தனிமைப்படுத்தப்படுவதற்கான விதிகளில் 14 நாட்கள் என்று இருந்தபோதும் கேரள அரசு 28 நாள் தனிமை என்பதைக் கட்டாயமாக வைத்துள்ளது.

கேரளாவுக்கு வருகை தந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 112 பேர் ஊரடங்கு காரணமாக அங்கேயே சிக்கிக்கொண்டனர். இந்த நிலையில் இன்று காலை கொச்சி விமான நிலையத்திலிருந்து சிறப்பு ஏர் இந்தியா விமானம் மூலம் அவர்கள் பாரீஸ் சென்றனர். அவர்களுக்கு ஏற்கெனவே செய்யப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று இல்லை என்பது உறுதியானது. எனினும் இன்று நாடு திரும்பும்போது விமான நிலையத்தின் விதிகளின்படி அவர்களுக்கு மீண்டும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவர்களது உடைமைப் பொருட்களுக்கும் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டன. அதன் பிறகு அவர்கள் இந்தியாவின் சார்பில் பிரத்யேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு ஏர் இந்தியா விமானம் மூலம் பாரீஸ் புறப்பட்டுச் சென்றனர்.



# வீட்டில் தயாரித்த முக கவசத்தையும் பயன்படுத்தலாம்!

இந்தியாவில் கொரோனா வேகமாகப் பரவி வரும் நிலையில் மக்கள் அனைவருக்கும் முகக்கவசம் கிடைப்பதில் பெரும் தட்டுப்பாடு இருந்து வருகிறது. இதனால் முகக் கவசத்தின் விலையும் திடீரென உயர்ந்து வருகிறது. இதையடுத்து மக்கள் வீடுகளிலேயே முகக் கவசங்களைத் தயாரித்து அவற்றைப் பயன்படுத்தலாம் என்று அறிவித்துள்ளது.

இந்திய அரசு சமீபத்தில் வீட்டிலேயே மக்கள் முகக் கவசத்தை எளிய முறையில் தயாரிப்பது குறித்து விளக்கம் அளித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்து.

தொடக்கத்தில் கொரோனா வைரஸ் பரவிய நேரத்தில் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டியதில்லை. அறிகுறிகள் இருப்போர், தும்மல், சளி இருந்தால் அவர்கள் அணியலாம் என மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். ஆனால், தற்போது கொரோனா பரவும் வேகம் அதிகரித்து இருப்பதால் மக்களுக்கு இந்திய அரசு புதிய அறிவுரைகளை வழங்கியுள்ளது.

இதன்படி, சுவாசக் கோளாறு இல்லாதவர்கள், உடல்நலப் பிரச்சினை இல்லாதவர்கள்கூட வெளியே செல்லும்போது முகக்கவசம் அணிந்து செல்ல அறிவுறுத்தப்படுகிறார்கள். முகக்கவசம் வீட்டிலேயே தயார் செய்யப்பட்டிருந்தாலும், துவைத்து மீண்டும் பயன்படுத்தக்கூடியதாக இருந்தாலும் அந்த முகக் கவசத்தைப் பயன்படுத்தலாம். குறிப்பாக வீட்டை விட்டு வெளியே போகும்போது முகக்கவசம் அணியாமல் மக்கள் செல்லக்கூடாது. முகக் கவசம் அணிந்து செல்வது நம்முடைய நோய் எதிர்ப்பு சக்தியைப் பாதுகாக்கத் துணைபுரியும்.

வீட்டில் முக்கவசம் தயாரித்தால், குடும்ப உறுப்பினர்கள் தனித்தனியாகப் பயன்படுத்த வேண்டும், ஒருவர் பயன்படுத்திய முகக் கவசத்தைத் துவைத்து மற்றவர்கள் பயன்படுத்தக்கூடாது. முகக்கவசம் நன்றாக மூக்கு, வாய்ப் பகுதியை மூடும் வகையில் இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

# குணமாவோர் எண்ணிக்கை அதிகரித்தாலும்

# இத்தாலியில் உயிரிழப்புகள் இன்னும் குறைந்தபாடில்லை

கொரோனா வைரஸின் கோர தாண்டவத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இத்தாலியில் தொற்று அதிகரிப்பு வீதம் குறையத் தொடங்கி நம்பிக்கை ஒளி வந்துள்ளபோதிலும், நாள்தோறும் உயிரிழக்கும் மக்களின் எண்ணிக்கை குறையவில்லை.

நேற்று ஒரேநாளில் கொரோனா வைரஸுக்கு 766 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் இதுவரை உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 681 ஆக அதிகரித்து 15 ஆயிரத்தை நெருங்குகிறது.

தொடரும் உயிரிழப்புக்களுக்கு மத்தியிலும் நம்பிக்கை அளிக்கும் வகையில் தொற்றிலிருந்து குணமடைவோரின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. 19 ஆயிரத்து 758 பேர் இதுவரை குணமடைந்துள்ளார்கள்.

கடந்த 48 மணி நேரத்தில் குணமடைந்தோர் 17 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேபோல புதிதாக பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. 4 ஆயிரத்து 585 ஆகக் குறைந்துள்ளது. கொரோனா வைரஸிடம் சிக்கிச் சீரழிந்த இத்தாலிக்கு இது நம்பிக்கை ஒளி ஊட்டுவதாக இருக்கின்றது.

ஒட்டுமொத்தமாக இத்தாலியில் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 827. இவர்களில் 85 ஆயிரத்து 388 பேர் இன்னமும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்தாலியில் மோசமாக பாதிக்கப்பட்ட லம்பார்டி மண்டலத்தில்தான் பெரும்பாலான உயிரிழப்புகள் நிகழ்ந்தன, இப்போது அங்கும் உயிரிழப்புகள் படிப்படியாக குறைந்து வருகிறது

"கொரோனாவால் குணமடைந்தோர் எண்ணிக்கை மெல்ல அதிகரித்து வருகிறது, பாதிப்பும் குறைந்து வருகிறது, இப்போதுதான் நாங்கள் மெல்ல நிம்மதி மூச்சுவிடத் தொடங்கியுள்ளோம் என்று தெரிவித்தார் லம்பார்டி மண்டலத்தின் தலைமை மருத்துவ அதிகாரி ஜியுலே கலேரா. இத்தாலியில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்தவுடன் மருத்துவமனை, மருந்தகங்கள் தவிர அனைத்தையும் மூடகடந்த மாதம் 12ஆம் திகதி உத்தரவிட்டது. ஐரோப்பாவில் முதன்முதலாக இத்தாலி தான் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. மேலும் ஏப்ரல் 13ஆம் திகதி வரை மக்கள் பொது இடங்களில் கூடவும் தடை விதித்தது.

அமெரிக்க ஆய்வில் தகவல்

## மூச்சுக் காற்று மூலமும் கொரோனா பரவ வாய்ப்பு

### அதனால் அனைவரும் முகக் கவசம் அணிவது கட்டயாம்

கொரோனா வைரஸ் காற்றில் பரவாது என்று முதலில் கூறப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்டவர் விடும் மூச்சுக்காற்றிலும், பேசும்போதும் மற்றவர்களுக்குப் பரவும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்து அரசுக்கு எச்சரித்துள்ளனர்.

அதனால் அமெரிக்க மக்கள் அனைவரும் முகக் கவசம் அணிந்து செல்ல வேண்டும் என்று அமெரிக்க அரசு அறிவுறுத்தியுள்ளது. இதன் மூலம் கொரோனா அறிகுறி இருப்பவர்கள் மட்டும்தான் முகக்கவசம் அணிய வேண்டும் என்ற கட்டாய நிலை மாறி, அனைவருமே அணிந்திருத்தல் நலம் என்ற கருத்து வந்துள்ளது

கொரோனா வைரஸ் காற்றில் பரவாது, பாதிக்கப்பட்ட நோயாளி இருமும்போதும், தும்மும்போதும் வெளிவரும் நீர்த்துளிகள் மூலம் பரவும். அந்த நீர்த்துளிகள் பட்ட இடத்தைத் தொடும்போது பரவும் என்று கூறப்பட்டது. ஆனால், அமெரிக்காவில் உள்ள தேசிய சுகாதார அமைப்பு நடத்திய ஆய்வில் பாதிக்கப்பட்டவர் பேசும்போதும், விடும் மூச்சுக்காற்றின் மூலமும் பரவும் வாய்ப்புள்ளது என எச்சரித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவின் தேசிய சுகாதார நிறுவனத்தின் தொற்றுநோய் பிரிவுத்துறையின் தலைமை விஞ்ஞானி அந்தோனி பாஸி கூறுகையில், முகக்கவசம் அணிவது குறித்த வழிகாட்டுதல் நெறிமுறைகளில் மாற்றம் கொண்டுவரப்படும். சமீபத்தில் கிடைத்த ஆய்வுத் தகவலின்படி கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் இருமும்போதும், தும்மும்போதும் மட்டுமல்ல அவர்கள் பேசும்போதும், அவர்கள் விடும் மூச்சுக்காற்று மூலம்கூட எதிராளிகளுக்குக் காற்றில் பரவக்கூடும் எனத் தெரியவந்துள்ளது.

ஆதலால், எங்களின் அதிகாரபூர்வ அறிவுரை என்பது பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல அனைவரும் முகக் கவசம் அணிந்திருந்தால் கொரோனா வராமல் தடுக்கலாம். இது தொடர்பாக தேசிய அறிவியல் அகாடமி தனது ஆய்வு முடிவுகளை வெள்ளை மாளிகைக்கு முதலாம் திகதி அனுப்பியது. அதைத் தொடர்ந்து இந்த அறிவுரைகளை அளிக்கிறோம் எனத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நேனல் சயின்ஸ் அகாடமி ஆய்வு அறிக்கையின்படி, கொரோனா வைரஸ் பரவல் குறித்து எங்கள் ஆய்வுகள் இன்னும் முழுமையாக முடியவில்லை. ஆனால், பாதிக்கப்பட்டவர்கள் விடும் சுவாசக்காற்று, பேசுதல் மூலமும் எதிராளிகளுக்குப் பரவும் சாத்தியம் இருப்பது தெரியவந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

ஆனால், அமெரிக்க சுகாதாரத்துறை மக்களுக்கு வெளியிட்ட அறிவுரையின்படி கரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் தும்மும்போதும், இருமும்போதும் வெளிவரும் நீர்த்துளிகள் படாதவாறு ஒரு மீற்றர் இடைவெளியில் இருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தது. இனிமேல் தனது அறிவுரைகளில் மாற்றம் கொண்டுவரும்.

சமீபத்தில் நியூ இங்கிலாந்து ஜர்னல் ஆப் மெடிசன் வெளியிட்ட தகவலின்படி, கொவிட் - 19 வைரஸ் காற்றில் குறைந்தபட்சம் 3 மணிநேரம் வரை உயிருடன் இருப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரிவித்திருந்ததையும் கருத்தில் கொள்வது அவசியம்

# ஒரே நாளில் 1, 400 பேர் அமெரிக்காவில் மரணம்

### 24 மணி நேரத்தில் நிகழ்ந்த ஆகக்கூடுதலான இழப்பு

கொரோன வைரஸின் கோரப் பிடியில் சிக்கிய அமெரிக்கா மிக மூாசமாகச் சிதைந்து வருகின்றது. கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் அமெரிக்காவில் ஆயிரத்து 480 பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது

கொரோனா வைரஸ் பெருந்தொற்றுநோய் உலகில் பரவத் தொடங்கியபின் ஒரே நாளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஒருநாட்டில் உயிரிழப்பது இதுதான் முதல்முறையாகும்

உலகளவில் கொரோனா வைரஸ் குறித்து ஆய்வு நடத்திவரும் அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையில் கடந்த 24 மணிநேரத்தில் அமெரிக்காவில் மிகமோசமாக கொரோனா வைரஸின் பாதிப்புக்கு ஆயிரத் 480 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் அமெரிக்காவில் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 7 ஆயிரத்து 403 ஆக அதிகரித்துள்ளது' என்று தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் இந்த உலகில் பரவத்தொடங்கிய பின், ஒரே நாளில் நிகழ்ந்துள்ள மிகமோசமான உயிரிழப்பு இதுவாகும். அமெரிக்காவில் கொரோனா வைரஸால் இதுவரை 2 லட்சத்து 77 ஆயிரத்து 161 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள், 2 லட்சத்து 57 ஆயிரத்து 486 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். 12 ஆயிரத்து 283 பேர் கரோனா வைரஸிலிருந்து குணமடைந்துள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் புதிதாக 32 ஆயிரத்து 284 பேர் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என அந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

உலகளவில் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை இன்றையநிலவரப்படி 11லட்சத்து 18 ஆயிரத்து 562 ஆக இருக்கிறது. 59 ஆயிரத்து 226 பேர் உயிரிழந்துள்ளனர். 2 லட்சத்து 28 ஆயிரத்து 293 பேர் கரோனா வைரஸிருந்து குணமடைந்துள்ளனர்

இதில் மிகமோசமாக பாதிக்கப்பட்டிருப்பது ஐரோப்பிய நாடுகள்தான். இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் மட்டும் 40 ஆயிரத்து 768 பேர் உயிரிழந்துள்ளனர். 5 லட்சத்து 74 ஆயிரத்து 525 பேர் கரோனா வைரஸால் ஐரோப்பிய நாடுகளில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மிக மோசமாக இத்தாலியில் 14 ஆயிரம் பேரும், ஸ்பெயினில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோரும் உயிரிழந்துள்ளனர்.

# கொரோனாவால் இறந்துபோன மக்களுக்கு சீனாவில் அஞ்சலி!

சீனாவில் கொரோனா வைரஸால் உயிரிழந்த பொதுமக்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு இன்று 3 நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

சீனாவின் வுஹான் நகரிலிருந்து பரவிய கொரோனா வைரஸ் 204 நாடுகள் மற்றும் தனியாட்சிப் பகுதியில் தொற்றை ஏற்படுத்தியுள்ளது. சுமார் 11 லட்சத்து 17 ஆயிரத்து 860 பேர் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 59,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸால் அமெரிக்கா, சீனா, இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகள் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளன.

இந்த நிலையில் சீனாவில் இன்று நாடு முழுவதும் கொரோனா வைரஸால் உயிரிழந்த பொது மக்கள், மருத்துவப் பணியாளர்களுக்கு 3 நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும் போக்குவரத்தும் மூன்று நிமிடம் நிறுத்தப்பட்டது.


இந்த நிகழ்வில் சீன அதிபர் ஜி ஜின்பிங் உட்பட பல முக்கியத் தலைவர்கள் கலந்துகொண்டு அஞ்சலி



செலுத்தினர். சீன தேசியக் கொடியின் முன் மலர் ஏந்தி சீன மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

சீனாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு சுமார் 81 ஆயிரத்து 639 பேர் பாதிக்கப்பட்டனர். 3 ஆயிரத்து 326 பேர் உயிரிழந்தனர். 76 ஆயிரத்து 725 பேர் குணமாகினர்.

பனங்காட்டான்
கனி



# கொரோனா என்ற கொள்ளை

# மூன்றாம் உலக யுத்தமா?

இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் 'கொள்ளை' என்ற மாற்ற மருந்தில்லாத நோய்க்குள்ளாகி இறந்தவர்களை அவர்களின் உடலில் கைபடாது படுத்த பாயுடன் சுருட்டித் தூக்கிக் கிடங்கில் போட்டு எரித்து விடுவது சட்டத்துக்குட்படாத வழக்கமாகவிருந்தது. இன்று கொரோனா மரணங்களும் அது போன்ற இறுதிச் சடங்குகளையே சந்திக்கின்றன. மரணித்தவர் இரத்த உறவாயினும், தொற்று நோயாக இருப்பின் வேறு என்ன செய்ய முடியும்?

சீனாவின் வுகான் மாநிலத்தில் பிறந்த ஒரு நச்சுக்கிருமியை உலகம் தத்தெடுத்து பங்கிட்டு அதன் தாக்கத்திலிருந்து விடுபட முடியாது தவித்துக் கொண்டிருக்கிறது.

இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படாத கொரோனா என்ற இந்த வைரஸ், சர்வதேசத்தையும் தனது பிடிக்குள் கொண்டு வந்து ஒவ்வொருவரையும் வாழ்வா, சாவா என்று நிலைகுலைய வைத்துள்ளது.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் குண்டுகளை விட மோசமான வீரியத்துடன் பரவும் இந்த வைரஸ் தானாக உருவானதா? அல்லது எவராவது ஒருவரால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதா?

பல மேற்கு நாடுகளின் விரல் சீனாவின் பக்கம் நீளுகின்றது. இதனை ஒரு பயங்கரவாதத் தாக்குதலென்று சில நாடுகள் பகிரங்கமாகக் கூறுகின்றன.

வெள்ளை மாளிகைக்கு அமெரிக்க புலனாய்வுத் துறை இது தொடர்பாக ஓர் அறிக்கையை சில நாள்களுக்கு முன்னர் கையளித்தது. சீனாவில் இந்நோயினால் பாதிக்கப்பட்ட அல்லது கொல்லப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கையை அந்நாட்டு அரசு இதுவரை வெளியிடவில்லையென்றும் பல உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளனவென்றும் இந்த அறிக்கை சுட்டுகின்றது.

சீனாவிடம் இந்நோயைக் கட்டுப்படுத்தும் அல்லது குணமாக்கும் மருந்து கைவசம் உள்ளதென ஓரிரு நாடுகள் நம்புகின்றன. இல்லையென்றால், வுகானில் பலரைக் கொலை செய்த கொரோனா



அங்குள்ள மற்றைய பிரதேசங்களுக்கு ஏன் பரவ முடியாமல் போனதென்ற கேள்விக்கு சீனாவிடம் மட்டுமன்றி எவரிடமும் பதிலில்லை.

கொரோனாவுக்கென தனியான மருத்துவ மனைகளை சில நாடுகள் கட்ட ஆரம்பித்துள்ளன. பல நாடுகளில் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டுள்ளன. உணவுச்சாலைகளும் களஞ்சியசாலைகளும் சீல் வைக்கப்படுகின்றன.

கனடாவின் ஒன்ராறியோவில் ஜூன் மாத இறுதி வரை சகல கொண்டாட்டங்கள், விழாக்கள், ஊர்வலங்கள், ஒன்றுகூடல்களுக்கு அரசு தடை செய்துள்ளது.

ஜூலை இறுதிவரை தற்போதைய அபாய சூழ்நிலை தொடருமென கருதுவதாக கனடிய மத்திய அரசின் உள்ளக அறிக்கையொன்றை மேற்கோள் காட்டி கனடிய மைய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. இது உண்மையாக இருக்குமானால், தற்போதைய கொதிநிலை இவ்வருட இறுதிவரை நீடிக்கக்கூடும்.

சில நாடுகளில் உடலப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிலகங்கள் உருவாக்கப்படுகின்றன. கொரோனா பாதிப்பால் வேலையிழந்த பலர் இத்தொழில்துறையில் வேலை பெற ஆரம்பித்துள்ளனர்.

அழிவில் கிடைக்கும் ஆதாயம் என்ற சொற்பதத்தை இது நினைவுபடுத்துகிறது. அழுவதா! சிரிப்பதா!

வருகின்ற வாரத்தில் இந்நோயினால் ஏற்படும் உயிரிழப்பு ஐம்பதாயிரத்தைத் தாண்டுமென்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. சிலவேளை இத்தொகை குறைந்த எண்ணிக்கையாகக்கூட இருக்கலாம்.

2019 நவம்பர் - டிசெம்பரில் மெதுமெதுவாக மனிதரை அரவணைத்து இறுக்கிப் பிடிக்க ஆரம்பித்த கொரோனாவால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தாண்டிவிட்டதாகவும், இதில் கொல்லப்பட்டோர் ஐம்பதினாயிரம் ஆகிவிட்டதாகவும் உலக சுகாதார அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இன்னும் மூன்று மாதங்களுக்குள் இந்நோயைக் கட்டுப்படுத்த தவறின் சுமார் ஐந்து மில்லியன் மக்கள் நோய்க்குட்படுவரெனவும், அவர்களுள் ஐம்பது வீதத்துக்கும் அதிகமானோர் பஞ்ச பூதங்களின் பிடியில் சென்றுவிடலாமெனவும் கணிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் பரவலானது இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உலகுக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளதென்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரோனியோ குடறெஸ் சுட்டிக்காட்டிள்ளார்.

இச்சபையின் தலைமையகம் அமைந்திருக்கும் அமெரிக்காவே இன்று கொரோனாவின் முதலாம் எதிரியாகியுள்ளது. ஆரம்பத்தில் இதனை 'சும்மா' என்று பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், சீனத் தலைவர் மற்றும் ரஷ்யத் தலைவர்களோடு நேரலைத் தொடர்பு கொண்டு ஆலோசனை கேட்குமளவுக்கு இறங்கியுள்ளார்.


இதனை அமெரிக்காவின் பலவீனம் என்பதா? அல்லது நோயின் பலமென்பதா? நீந்தத் தெரியாது ஆற்றில் இறங்கிவிட்டு, மூக்குமுட்டத் தண்ணீர் வந்தபின் நீச்சலடிக்க எத்தனிக்கும் முயற்சியென்று தான் இதனைக் குறிப்பிட வேண்டும்.

ஜோன்ஸ் கொம்கின்ஸ் பல்கலைக்கழகம் பெற்ற தரவுகளின்படி அமெரிக்காவில் 180,000 க்கும் அதிகமானோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். நான்கு அமெரிக்கர்களில் ஒருவர் அங்கு தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்.

கொரோனா தாக்கத்தின் விளைவாக உலகம் முழுவதும் 25 மில்லியன் ஆள்கள் வேலைகளை இழப்பரெனவும் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் செயலாளர், இந்த அமைப்பு உருவானதிலிருந்து அது ஒன்றாக எதிர்கொள்ளும் மிகப்பெரிய சோதனை இது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்த வேளையில் உலக சமாதானம் நோக்கிய சிந்தனையில் 1945 ஆம் ஆண்டு ஐ.நா. உருவானது. இப்போது உலகின் 193 நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. இதன் உருவாக்கம் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் என்று ஐ.நா. அறிக்கை குறிப்பிட்டுள்ளதால் அது பற்றி நோக்குவது அவசியமாகிறது.

> இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் 'கொள்ளை' என்ற மாற்ற மருந்தில்லாத நோய்க்குள்ளாகி இறந்தவர்களை அவர்களின் உடலில் கைபடாது படுத்த பாயுடன் சுருட்டித் தூக்கிக் கிடங்கில் போட்டு எரித்து விடுவது சட்டத்துக்குட்படாத வழக்கமாக விருந்தது. இன்று கொரோனா மரணங்களும் அது போன்ற இறுதிச் சடங்குகளையே சந்திக்கின்றன. மரணித்தவர் இரத்த உறவாயினும், தொற்று நோயாக இருப்பின் வேறு என்ன செய்ய முடியும்?




முதலாவது உலக மகாயுத்தம் 1914 ஆம் ஆண்டு ஜூலை 28 இல் ஆரம்பமாகி 1918 நவம்பர் 11வரை இடம்பெற்றது. இந்த யுத்தத்தில் ஒன்பது மில்லியன் படையினரும் ஏழு மில்லியன் பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

1918 இல், யுத்தத்தின் இறுதிக் காலத்தில் மோச மான இன்புளுன்வென்சா பரவி உரிய நிவாரணம் கிடைக்காது உலகளாவிய வரையில் சுமார் ஐம்பது மில்லியன் வரையானவர்கள் இறக்க நேர்ந்த தாக ஆவணப்பதிவுகள் தெரிவிக்கின்றன.

(07 ஆம் பக்கம் பார்க்க)

# கொரோனா என்ற கொள்ளை …

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது உலக மகாயுத்தம் 1939 செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து 1945 செப்டம்பர் 2 ஆம் திகதிவரை (ஆறு வருடங்களும் ஒரு நாளும்) இடம்பெற்றது. முப்பது நாடுகளைச் சேர்ந்த நூறு மில்லியன் ஆள்கள் இதில் நேரடியாகப் பாதிக்கப்பட்டனர்.

இரண்டாம் உலக யுத்தத்தினால் எழுபது முதல் எண்பத்தைந்து மில்லியன் வரையானோர் கொல்லப்பட்டனர். இதனைப் படுகொலைகள், இனக்கொலைகள், நாசகாரக் கொலைகள், அணுகுண்டுக் கொலைகள், ஆயுதக்கொலைகள், பட்டினிக் கொலைகள், திட்டமிட்ட கொலைகள், நோய்வாய்க் கொலைகள் என்று அறிக்கைகளும் ஏடுகளும் பட்டியலிட்டுள்ளன.

நோய்க் கொலைகள் என்பவை மருந்தின்றியும் சிகிச்சையின்றியும் வாரக்கணக்கிலும் மாதக்கணக்கிலும் படுக்கையில் கிடந்து சந்தித்த மரணங்களைக் குறிப்பவை.

இந்த மரணங்களை 'கொள்ளை' என்ற பெயரில் அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் குறிப்பிடுவர்.

எனது தாயார் 1920களில் பிறந்து இரண்டாம் உலக யுத்த அனுபவங்களை முழுமையாகப் பெற்றவர். அப்போது யுத்தம் வீச்சுப் பெற்றிருந்ததால் நிலக்கிடங்குக்குள் (பங்கர்) இருந்த நாள்களைப் பற்றியும், ஜப்பான் விமானங்கள் குண்டு வீச வரும்போது உள்ளூர்க் காவலர்கள் 'சைரன்' எச்சரிக்கை ஒலி எழுப்புவது பற்றியும் அவரிடம் பல கதைகள் இருந்தன. யுத்த காலத்தில் சிகிச்சை இல்லாது நோயினால் இழுபட்டு அடையாளம் தெரியாது ஏற்பட்ட மரணங்களை கொள்ளை மரணமென்று கூறி அவர்களை அவர்களின் படுத்த பாயுடன் சேர்த்து உருட்டி, கைகளால் அந்த உடலைத் தொடாது அப்படியே தூக்கிச் சென்று தீமூட்டிய பல சம்பவங்களை அவர் நேரில் கண்டுள்ளார்.

அந்தளவுக்கு கொள்ளை நோய் பயங்கர வைரஸ் தன்மையானது. சின்ன முத்து, பொக்குளிப்பான், அம்மை எனப்படும் தொற்று வருத்தங்களை அம்மன் தெய்வத்துடன் சம்பந்தப்படுத்தி அதற்கு மருத்துவம் செய்யாது மதரீதியான முறையில் அதற்கு பரிகாரம் செய்வார்கள்.

இப்போது கொரோனா நோயினால் இறப்பவர்களை வெள்ளைத் துணியினால் மூடிக்கட்டி சடலங்களை உறவினர்களிடம் கையளிக்காது அரசாங்க செலவிலேயே தகனம் செய்வதைப் பார்க்கும் போது இரண்டாம் உலக யுத்த கொள்ளை நோயாகவே இது காட்சி கொடுக்கிறது.

அதனால்தான் இந்நோய்க் குறிகள் காணப்படுவோர்களை தனித்திருங்கள், மற்றையோரிடமிருந்து தவிர்த்திருங்கள், சமூக நடமாட்டத்தை மறந்திருங்கள் என்று கோரப்படுகிறது. ஆனால் பெரும்பாலானோர் இதனை செவிமடுப்பவர்களாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியராகவிருந்த எனது கல்லூரித் தோழன் ஒருவன் தற்போது வடஅமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளான். இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் ஏன்தான் இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டேனோ என்று அடிக்கடி அங் கலாய்த்துக் கொள்வான்.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு அமுலில் உள்ளது. அங்கிருந்தாலும் எங்கும் செல்ல முடியாதுதானே என்ற எனது கருத்து அவனுக்கு ஏற்புடையாகவிருக்கவில்லை.

அங்கென்றால் ஒழுங்கைகளுக்குள்ளால் அப்படியும் இப்படியும் நடமாடலாம். ஒவ்வொரு வீட்டு வேலிக்குள்ளாலும் சென்று பத்தாவது வீடு வரை செல்லலாம். இங்கு வீட்டுக்கு வெளியேகூட செல்ல முடியவில்லையென்பது அவனது வாதம்.

அங்கு யுத்த காலத்திலிருந்த ஊரடங்கு வேறு. இப்போதையது வேறு. இப்போது வெளியில் சென்று அயலவர்களுடன் உறவாடினால் கண்ணுக்குத் தெரியாத வைரஸ் எல்லோரையுமே பீடித்துவிடும் என்ற எனது விளக்கம் அவனால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தபோதிலும், ஏனோ அது ஒவ்வாமையாக இருந்தது.

இதுதான் இன்று உலகம் சந்திக்கும் மிகப்பெரிய சவால். ஐ.நா. செயலாளருக்கு இது தெரியுமோ தெரியாது.

கொரோனா வைரஸ் கிருமிகளை காவித் திரிபவர்களாக நாம் இருப்போமானால், இதனால் சமூகம் - இனக்குழமம் - நாடு - உலகம் என எல்லாமே பாதிப்புறும்.

இதனை ஏற்கத் தவறின் கொரோனாவும் ஒரு கொள்ளை நோய்தான். இதுவே மூன்றாம் உலக மகா யுத்தமாகும்.

# ஔடதம் இப்போ அதுவாகும் !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேண் - ஆஸ்திரேலியா

அவசிய மின்றி போகாதே
ஆபத்து அங்கு காத்திருக்கு
இஞ்சியை மஞ்சளை மறவாதே
ஈரமாய் தொண்டையை வைத்துவிடு
உலாபோதல் நினைப்பை விட்டுவிடு
ஊரது நலத்தை உணர்ந்துவிடு
எச்சிலை வெளியில் துப்பாதே
ஏற்காத எதுவும் உண்ணாதே
ஐயம் வந்தால் வாங்காதே
ஒன்றையும் தொட்டிட விரும்பாதே
ஓரிடம் தேர்ந்து இருந்துவிடு
ஔடதம் இப்போ அதுவாகும் !

கட்டாயம் மிளகை சேர்த்துவிடு
காஷாயம் நன்றாய் குடிக்கநினை
கிட்டவே நிற்பதைத் தவிர்த்துவிடு
கீரை உணவில் சேர்த்துவிடு
குடிக்க மதுவை எண்ணாதே
கூடிக் கும்மாளம் அடிக்காதே
கெட்டித் தனமாய் நடந்துவிடு
கேடுகள் உன்னை அணுகாது
கைகளை நாளும் கழுவிவிடு
கொதிக்க வைத்தே நீரைக்குடி
கோரமாய் கொரனோ வருகிறது
கௌரம் பேணிட மறக்காதே ! ( கௌரம் - சுத்தம் )

சங்கடம் இப்போ நிறைந்திருக்கு
சாவாய் கொரனோ வந்திருக்கு
சித்திரம் வரைய சுவர்வேண்டும்
சீலமாய் இருத்தல் சிறப்பாகும்
சுத்தம் என்பது முக்கியமே
சூழ்ந்து இருளாய் இருக்கிறது
செல்லும் பாதை சீராக
சேமமாய் இருக்க எல்லோரும்
சைவ உணவை நாடிடுவோம்
சொற்களைக் கவனமாய் கேட்டிடுவோம்
சோம்பலை தவிர்க்கப் பயிற்சிசெய்வோம்
சௌக்கியம் எங்கள் சொத்தாகும் !



# உயிரிழந்த 5 ஆவது நபருக்கு வேறு நோய் ஏதுமே இல்லை



கொழும்பு, ஏப். 04

இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர் வேறு எந்தவொரு நோயாலும் பாதிக்கப்படாதவர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தாலி நாட்டிலிருந்து திரும்பிய ஹோமாகமவைச் சேர்ந்த 44 வயதுடையவர் இன்று அதிகாலை வெலிக்கந்தை வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இத்தாலியிலிருந்து மார்ச் மாத முற்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்த அவர், தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டார்.

கடந்த 23ஆம் திகதி கொரோனா தொற்றுக்குள்ளாகியதாக வெலிகந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவரது உடல்நிலை கடுமையானதால் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

எனினும் அவரது உடல்நிலை கவலைக்கிடமான நிலைக்குச் சென்ற நிலையில் இன்று (ஏப்ரல் 4) சனிக்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுத் தவிர்ந்த வேறு எந்தவொரு நோய் தாக்கமும் இல்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

# குறைந்தது மூன்று மாதங்களுக்காவது ஊரடங்குச் சட்டத்தை நீடிக்க வேண்டும்

## மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் அழுத்தம்

தற்போது நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், நாடு முழுவதும் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் ஜெயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவில் கொரோனா தொற்று அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில், இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்துரைத்த அவர் -

நாட்டில் கொரோனா தொற்றானது குறிப்பிடத்தக்களவு மேலும் அதிகரிக்கும் நிலைமை ஏற்பட்டால் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு நாடு முழுமையாக முடக்கப்பட வேண்டும்.

மூன்று மாதங்களுக்கு நாடு முடக்கப்படுவது கடினம் எனில், குறைந்தது ஒரு மாதத்திற்காவது ஊரடங்குச் சட்டம் நீட்டிக்கப்பட வேண்டும். இல்லை எனில் நிலைமை மோசமாகிவிடும்.

அதேபோன்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, அடுத்த இரண்டு வாரங்களில் கொரோனா வைரஸ் தொற்றுநோய்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகும் வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில், இருந்து அடுத்த கட்டத்திற்கு கொரோனா வைரஸ் விரிவடையும் அபாயத்தை நினைத்துப் பார்க்க முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# உங்களுடன் பழகியவர்களை நினைவில் வைத்திருங்கள்!



கொழும்பு, ஏப். 05

யார் யாருடன் பழகினோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாருடன் எல்லாம் பழகினோம் என்பதைத் தயவு செய்து ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். விசேடமாக மேல் மாகாணத்தின் கொழும்பு களுத்துறை, கம்பஹா மாவட்டங்கள் புத்தளம், கண்டி, யாழ். மாவட்டங்களில் உள்ளவர்கள் இக்காலப்பகுதியில் பழகியவர்கள் தொடர்பில் நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு ஏதேனும் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறி தென்பட்டால் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவியுங்கள். நீங்கள் உண்மையான தகவல்களை வழங்கும் போது உங்களையும் உங்களை சுற்றி இருப்போரையும் காப்பாற்ற இலகுவாக இருக்கும். தயவு செய்து உண்மைகளை மறைக்காதீர்கள் – என்றார்.

# இரணைமடு விமானபடை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 172 யாத்திரிகள் வீடுகளுக்கு அனுப்பி வைப்பு







கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் வெளிநாடுகளிலிருந்து இலங்கை திரும்பியவர்களை 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்தும் அரசின் நடவடிக்கைகளுக்கு அமைவாக கிளிநொச்சி இரணைமடு விமானப் படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 172 யாத்திரிகள் இன்றைய தினம் அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை இரணைமடு விமானப்படை முகாமில் விமானப்படை முகாம் பொறுப்பதிகாரியின் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. இந்தியாவுக்கு யாத்திரிகளாக சென்று நாடு திரும்பிய 171 பேரும், அபுதாயிலிருந்து நாடு திரும்பிய ஒருவருமாக 172 பேர் கடந்த 21-03 - 2020 இரணைமடு விமானப் படை நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களில் 127 பெண்கள், 45 ஆண்கள். அனைவரும் சிங்கள மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் அனைவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்ற நிலையில் அவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நாட்டின் பல பாகங்களிலும் 41 பொலீஸ் நிலையப் பிரிவுகளைச் சேர்ந்த இவர்கள் ஏழு விசேட பஸ்களில் விமானப்படை மற்றும் பொலீஸாரின் பாதுகாப்புடன் உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தாங்கள் இவ்வாறு 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டமை தொடர்பில் எவ்வித மனவருத்தமோ கவலையோ இல்லை எனவும், நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாதுகாப்புக் கருதி அரசின் இந் நடவடிக்கையைத் தாங்கள் முழுமனதோடு ஏற்றுக் கொண்டுள்ளனர் எனத் தெரிவித்த அவர்கள் தனிமைப்படுத்தலை கௌரவ குறைவாகவோ அல்லது குற்ற உணர்ச்சியோடோ நோக்கத் தேவையில்லை என்றும் அ தெரிவித்தனர். மேலும் தங்களை விமானப்படையினர் மிகவும் அக்கறையோடு பாராமரித்தார்கள், அவர்களுக்கு தாங்கள் மிகுந்த நன்றியை தெரிவிக்கின்றனர் எனவும் கூறினர்.

காலைக்கதிர்
Kalaikathir

மாட்டு வண்டில்




தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி

நாளைய (05/04/2020) தலைப்பு
மாட்டு வண்டில்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# அத்தியாவசிய உணவு பொருள்களின் விலைகள் யாழில் திடீரென எகிறின

## உடன் நடவடிக்கைக்குக் கோருகிறார் அங்கஜன்

*யாழ்ப்பாணம்,ஏப்.04*

*யாழ் மாவட்டத்தில் அத்தியாவசிய உணவு பொருள்களின் விலைகள் திடீரென் உச்சம் அடைந்துள்ளன எனத் தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனிடம் கோரிக்கை விடுத்தார்.*



இது தொடர்பில் அங்கஜன் இராமநாதன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ் மாவட்டத்தில் தற்போது ஊரடங்கு சட்டம் தொடர்ந்து அமுலில் உள்ள காரணத்தினால் யாழ் மாவட்ட மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அருகில் உள்ள கடைகளில் அல்லது நடமாடும் சேவை மூலம் தமது அத்தியாவசிய உணவு மற்றும் வேறு இதர பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டுப்பாட்டு விலைகளிலும் பார்க்க மிக கூடுதலான விலையில் அவை விற்பனை செய்யப்படுகின்றன எனப் பலரும் முறைப்பாடு செய்துள்ளனர். இதனால் பெரிதும் பாதிப்படைவது நலிவுற்ற வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மக்களேயாவர்.

ஆனால் இந்த அசாதாரண சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்தி யாழ் மாவட்டத்தில் உள்ள சில மொத்த மற்றும் சில்லறை வியாபார நிறுவனங்கள், பலசரக்குக் கடைகள், சதொசா கிளைகள், நடமாடும் வியாபார, விநியோக சேவையினர் மற்றும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் தற்போது ஒரு வியாபார உத்தியாக அத்தியாவசிய உணவு பொருள்களை அளவுக்கு அதிகமாக தமது களஞ்சியசாலைகளில் பதுக்கி வைத்து, சந்தையில் செயற்கைத் தட்டுப்பாட்டின் மூலம் மக்கள் மத்தியில் பயபீதியை ஏற்படுத்தி இரட்டிப்பு விலைகளில் விற்பனை செய்ய முயற்சிக்கின்றனர் எனப்பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அரசாங்கத்தின் நிவாரண திட்டத்தின் மூலம் முதியோருக்கான கொடுப்பனவு, மாற்றுத் திறனாளிகளுக்கான கொடுப்பனவு, விவசாய மற்றும் மீனவ ஓய்வூதியம் பெறுவோருக்கான கொடுப்பனவு, சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு, சமூர்த்தி பயனாளிகள் மற்றும் சமூர்த்தி தகைமை உள்ளோருக்கான ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு என விசேட உதவித் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நிலையில் இந்த அத்தியாவசிய உணவு பொருள்களை நியாயமான விலையில் விற்றால் மாத்திரமே அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவித் தொகை மூலம் இவர்கள் பயனடைவர்.

ஆனால் அத்தியாவசிய உணவு மற்றும் இதர பொருள்களின் விலைகள் அபரிமிதமாக அதிகரித்து விற்றகப்படும் பட்சத்தில் இக்கொடுப்பனவு கிடைக்கப்பெறுபவர்களுக்கு அந்த கொடுப்பனவு அவர்களது அத்தியாவசிய உணவுத் தேவைக்கு போதுமானதாக இருக்காது.

இவ்வாறு அத்தியாவசிய உணவு பொருள்களைப் பதுக்கி வைத்துக் கட்டுபாட்டு விலையை மீறி விற்பனை செய்வோரை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை விசாரணை அதிகாரிகள் உடனடியாக அடையாளம் கண்டு உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் மக்களுக்கு நியாயமான விலைகளில் அத்தியாவசிய பொருள்கள் கிடைப்பதற்கான வழிவகைகள் செய்ய வேண்டும்.- என்றார்

# கொரோனா தொற்றுள்ள பெண்ணுக்குப் பிரசவம்

### தாயும் சிசுவும் தனிமைப்படுத்தப்பட்டனர்

*களுத்துறை மாவட்டம், பேருவளை, பன்னில பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசத்தில் மறைந்திருந்த 28 வயதுடைய கர்ப்பிணி, களுத்துறை நாகொட வைத்தியசாலையில், இன்று சிசுவைப் பிரசவித்துள்ளார்.*

*இந்தத் தகவலை பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி வருண செனவிரத்ன தெரிவித்தார்.*

*இந்தப் பெண்ணின் இரத்த மாதிரியை சோதனை செய்தபோது, அப்பெண்ணுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இந்தநிலையில், குறித்த பெண் பிரசவித்த சிசுவின் நிலை குறித்து வைத்தியர்கள் பரிசோதனை மேற்கொண்டு வருவதுடன், தாயையும் சிசுவையும் தனிமைப்படுத்தியுள்ளனர்.*

*இதனையடுத்து, பேருவளையில் இதுவரை இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 13ஆக அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.*

# ஊரடங்கு அனுமதிகளை மட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஏப். 04

பொலிஸ் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரம் தொடர்பில் விசேட செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகளை முறையாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் தற்போது வாகனங்களுக்கான ஊரடங்குச் சட்ட அனுமதி பத்திரங்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் அனுமதியுடன் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரத்தை முறைகேடாக பயன்படுத்துவது தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளை ஆராய்ந்து அனுமதிப் பத்திரங்களை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.







## இன்சுலின் தட்டுப்பாடு!

கொழும்பு, ஏப். 04

நாட்டில் உள்ள அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இன்சுலின் மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த அந்தச் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஜெயந்த பண்டார, நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இன்சுலின் பயன்படுத்தப்படுகின்றது என்றும் இதற்கு அரச மருத்துவமனைகள் பற்றாக்குறை நிலவுவதாகவும் கூறினார்.

இன்சுலின் பெறுவதன் மூலம் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் பல நீரிழிவு நோயாளிகள் அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ளதால் மருத்துவமனைகள் பதிவுசெய்யப்பட்ட நோயாளிகளுக்கு தேவையான இன்சுலினை அவர்கள் தபால் மூலம் வீடுகளுக்கு பெற்றுக்கொள்கின்றனர் என்றும் கூறினார்.

எனவே இந்த பிரச்சினைக்கு உடனடி தீர்வை வழங்குமாறும் அவர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# நாட்டில் தேவைக்கேற்ற அளவில் மருந்து வகைகள் கையிருப்பில்!

கொழும்பு,ஏப்.04

நாட்டில் தேவைக்கேற்றளவு போதுமான அளவு மருந்துக் கையிருப்பில் இருப்பதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் பொது மக்கள் தேவையற்ற குழப்ப நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

தட்டுப்பாடு இன்றி, தொடர்ச்சியாக மருந்துகளை பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவைக்கு அதிகமான மருந்துகளைக் களஞ்சியப்படுத்த வேண்டிய தேவை இல்லை என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேவைக்கு அதிகமான மருந்துகளை வைத்திருப்பதன் மூலம் அதன் தரம் குறைவடைவதாகவும் அகில இலங்கைத் தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

ஊரடங்கு வேளையிலும் மருந்து பொருள்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வீட்டில் இருந்தவாறே மருந்துகளைக் கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.



வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வீ.கே சிவஞானத்தின் நிதியில் இரண்டாம் பகுதி இளவாலை வலுத்துாண்டல் கிராமத்திற்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.மக்கள் பணிக்கான இந்த முயற்சியில் அவைத் தலைவர் சி.வீ.கே சிவஞானம் மற்றும் இலங்கை தமிழரசு கட்சியின் பொருளாளர் கனகசபாபதி, வலி வடக்கு பிரதேச ச்பைத் தவிசாளர் சுகிர்தன், உப தவிசாளர் இராஜேந்திரம், வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர் கலைஅமுதன்,யாழ் மாவட்ட வாலிபர் அணி தலைவர் பிருந்தன் ஆகியோர் பங்காற்றியிருந்தனர்

## ஊரடங்கில் ஒன்றுகூடுபவர்களை பிடிக்க புலனாய்வுப் பிரிவு களத்தில்



கொழும்பு, ஏப். 04

ஊரடங்கு உத்தரவை மீறி, கொழும்பில் சன நெரிசல் மிக்க பகுதிகளில் இரவு வேளைகளில் சுற்றித் திரிபவர்கள், ஒன்று கூடுபவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை புலனாய்வு பிரிவினர் நேற்று ஆரம்பித்துள்ளனர் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவை கவனத்தில் எடுக்காத சிலர், இரவு நேரங்களில் தொடர்மாடி மனைகளில் ஒன்று கூடுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே ஊரடங்கு உத்தரவை மதித்து வீடுகளுக் குள்ளே இருக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொக்குவில் இந்து மாணவர்களுக்கு உதவி

தற்போதைய ஊரடங்கினால் பாதிக்கப்பட்டுள்ள கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவ சமூகத்திற்கு உதவுவதற்கு கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் முன்வந்துள்ளது.

இது தொடர்பில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தற்போது கொரோன வைரஸ் தாக்கம் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்ட நடைமுறையினால் அன்றாடம் உழைக்கும் குடும்பங்கள் தங்களின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் எமது பாடசாலை மாணவர்கள் சிலரும் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதை எம்மால் அறிய முடிகின்றது. எனவே தற்போது கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு (அவர்களின் குடும்பங்களுக்கு)மனிதாபிமான உதவியை மேற்கொள்ளவதற்கு எமது சங்கங்கள் முன்வந்துள்ளன.

எனவே உதவியை எதிர் நோக்கியிருக்கும் மாணவர்களின் குடும்பத்தினர் கல்லூரி அதிபர்,பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள்,வகுப்பாசிரியர், ஆசிரியர்களின் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பினை ஏற்படுத்தி தமது விவரங்களை வழுங்குமிடத்து எம்மால் அவர்களுக்கான உணவுத் தேவைக்கான எமது பங்களிப்பினை வழங்க முடியும் என்பததை அறியத்தருகின்றோம் .

பழையமாணவர் சங்க தொடர்புகளுக்கு :

தலைவர் – ஆ.சத்தியமூர்த்தி – 077 169 8073.
செயலாளர் – வி.தயாபரன் – 077 608 0926
பொருளாளர் – வ.பிரபாகரன் – 077 605 1245

## கருவி அங்கத்தவர்களுக்குப் பொதிகள் வழங்கல்

'கருவி மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையத்தின்' உறுப்பினர்களில் அவசர தேவையுடையோர் 200பேரை இனங்கண்டு அவர்களுக்கான உலர் உணவு வழங்கிவைக்கும் திட்டம் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு யாழ்.மாவட்டச் செயலாளர் திரு.மகேசன் மற்றும் மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) திரு.எஸ். முரளிதரன் ஆகியோர் உதவியுடன்பயனானிகளுக்கு நேற்று நேரடியாக வழங்கி வைக்கப்பட்டது.

பொருள்களைப்பொதி செய்வது தொடக்கம் பயனாளிகளுக்கு அவர்கள் சார்ந்த பிரதேசச் செயலகங்களுக்கூடாக விநியோகிக்கின்ற அனைத்துச் செயற்பாடுகளையும் யாழ். மாவட்டச் செயலகமே முன்னெடுத்திருந்தது.

அது மட்டுமல்லாது மிக விரைவாக பொதிகளைப் பயனாளிகளின் முகவரிக்கு எடுத்துச் சென்று சில மணி நேரங்களுக்குள் வழங்க உதவியிருக்கிறது யாழ்.மாவட்டச் செயலகம் எனத் தெரிவிக்கப்பட்டது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.04.2020 இல் வெளியிடப்பெற்றது.